

# கீழைத்தேச ஏகாதிபத்தியத்தின் எழுச்சியும் மேற்குலக ஏகாதிபத்தியத்தின் நெருக்கடியும்!

## அமெரிக்க ஐரோப்பிய உறவு வெளிப்படுத்தும் செய்தி

பேராசிரியர் கே. ரி. கணேசலிங்கம்

சர்வதேச அரசியலின் மாற்றங்களை நோக்கி நகருகிறது. உலகளாவிய அமெரிக்க வல்லரசு பலம் வீழ்ச்சியை நோக்கிய முகத்தைக் கொண்டிருந்தாலும், அதிலிருந்து அமெரிக்காவோ அல்லது வெள்ளையர்களோ மீள்வதற்கான திட்டங்களைத் தொடர்ந்து வகுத்துவருகின்றனர். இதனை அவர்களது நகர்வுகளைக் கொண்டு அளவிடமுடியும். உலக எஜமானர்கள் தாமே எனக்கருதும் வெள்ளையர்கள் ஏனைய கண்டங்களை ஆழவும் ஆதிக்கம் செய்யவும் தொடர்ந்து போராடி வருகின்றனர். அதில் ஒரு கட்டமே அமெரிக்காவின் ஜனாதிபதி ஜோ பிடன் 2021 ஜீன் 9 முதல் 16 வரை ஐரோப்பாவுக்கு மேற்கொண்ட விஜயம் உணர்த்துகிறது. மீளவும் மேற்கு தனது ஏகாதிபத்தியத்தை நிலைநிறுத்த திட்டமிடுகிறது. அமெரிக்க ஜனாதிபதி ஜோபிடனது ஐரோப்பிய பயணம் ஜி7 சந்திப்பு, ஐரோப்பிய ஒன்றியத்துடனான உரையாடல், நேட்டோவுடனான திட்டமிடல், நிறைவாக ரஸ்சிய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடனான சந்திப்பு என்பன மேற்கு ஏகாதிபத்தியத்தைச் சரிவிலிருந்து மீட்பதற்கான நகர்வாகவே தெரிகிறது. மார்க்சியவாதியும் சோவியத் ரஸ்சியாவின் சோஸலிஸத்தின் தந்தையுமான விடாடிமிர் லெனின் குறிப்பிட்டது போல் ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சக்கட்டம் எனும் நூலை 1916 இல் வெளிக்கொண்டுவந்திருந்தார். இவரது முயற்சிக்கு முன்னோடியாக இங்கிலாந்தின் பொருளியல் தத்துவஞானியான ஜோன் ஹெப்க்ஷன் ( John A. Hobson) 1902 இல் எழுதிய Imperialism என்ற நூல் இருபதாம் நூற்றாண்டில் முதலாளித்துவம் ஏகாதிபத்தியமாக உருத்திரண்டுவிட்டது என்றார். அதாவது முதலாளித்துவத்தின் ஏகபோகக் கட்டமே ஏகாதிபத்தியம் எனக் கூறவேண்டும்.

ஒரேயொரு சாம்ராச்சியத்திற்கான அவாவும் அரசியல் ஆதிக்க விஸ்தரிப்பும் வாணிப ஆதாயமாகிய ஒத்த வேட்கையும் அதனால் உந்தப்பட்ட போட்டியிடும் சாம்ராட்சியங்களது தத்துவ நடைமுறை வளர்ச்சி பெற்று இன்னோர் கட்டத்தை அடைந்தது. அது வாணிப நலன்கள் மீது நிதி அல்லது முதலீட்டு நலன்கள் ஆதிக்கம் பெறுவதாகும். அதாவது ஒன்றுக்கு மேற்பட்ட ஏகாதிபத்தியங்கள் தமக்கிடையே போட்டியிடுவதும் தொழில் துறை மூலதனத்தையும் நிதி மூலதனத்தையும் குணாதிசயமாகக் கொண்டு இயங்குவதைக் குறிப்பதலாகும். அது மட்டுமன்றி உற்பத்தியின் ஒன்று குவிப்பு அதிலிருந்து ஏகபோகம் எழுவதும் வங்கிகள் தொழில் துறையுடன் இணைவதுவும் அதன் இயல்பாக தெரிகிறது. இதன்போக்கு இருபத்தியோராம் நூற்றாண்டின் இரு தசாப்தங்கள் மேற்குலகத்திடமே குவிந்திருந்தது.

ஆனால் இரண்டாவது தசாப்தத்தின் பிற்பகுதியில் சீனாவும் அதற்கு அனுசரணையாக ரஸ்சியாவும் எழுச்சி பெற்றதுடன் கீழைத்தேச ஏகாதிபத்தியம் எழுச்சி அடையத் தொடங்கியுள்ளது. இது ஏறக்குறைய பராக்ஒபாமாவின் ஆட்சியின்' இறுதிப் பகுதியில் கருக்கொண்டுவிட்டதாக ஒபாமா வரைந்த The Promise Land எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார். அதனை முன்னாள் ஜனாதிபதி டொலாட் ட்ரம்ப் முழுமைப்படுத்தியிருந்தார். அதாவது சீனாவின் எழுச்சிக்கான காலமாகவும் இரு ஏகாதிபத்தியங்களுக்குமான முரண்பாடு உச்சமடையும் காலமாகவும் அது அமைந்திருந்தது. இதனை மீட்பதற்கே அமெரிக்க ஜனாதிபதி ஜோபிடன் முயன்று வருகிறார் என்பது அவரது நகர்விலிருந்து அவதானிக்கமுடிந்தது. குறிப்பாக அவரது ஐரோப்பிய விஜயத்தில் சீனா மற்றும் ரஸ்சியாவின் நடவடிக்கைக்கு எதிரான உரையாடல்களையே அதிகம் முதன்மைப்படுத்தியிருந்தார். அத்தகைய விடயங்களை முதலில் அவதானிப்போம்.

ஜீன்–11 முதல் 12 வரை ஜீ7 மாநாட்டில் கலந்து கொண்ட ஜோ பிடன் உலகளாவியரீதியில் எழுந்துள்ள பாரிய கொரோனா பரவலை எதிர்கொள்ளுதல் அதனால் எற்பட்டிருக்கின்ற பொருளாதார சவாலை கையாள்வது பிரதான நிகழ்ச்சி நிரலாக இருந்தது. ஜி7 நாடுகளிடையிலே முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் காலத்தில் ஏற்பட்ட குழப்பகரமான உறவைச் சரிசெய்வதும், அந்நாட்டு தலைவர்களுடன் இருபக்க உரையாடல்களை மேற்கொள்வதும் பிரதான நோக்கமாகக் கொண்டிருப்பதோடு காலநிலை மாற்றம், சீனாவின் எழுச்சி, ரஸ்சியாவின் அணுகுமுறைகள் தொடர்பில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் என்பன மிகப்பிரதான உரையாடல் அம்சங்களாக காணப்பட்டன. ஜி7 தலைமைகளுடனான சந்திப்பு இந்நாடுகளுடனான வர்த்தகக் கூட்டினைப் பலப்படுத்துவதும் ஒரே அணியில் இணைந்து சீனாவின் பொருளாதார ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தவதும் பற்றிய உபாயங்களை வகுப்பதாகவே அமைந்திருந்தது.

ஜீன்–14 அமெரிக்க ஜனாதிபதி பிடனின் நேட்டோ சந்திப்பு நிகழ்ந்தது. 2018ஆம் ஆண்டுக்கு பின்னர் பிடன் இத்தகைய மாநாட்டில் நேட்டோ நாடுகளைச் சந்திப்பது மிக முக்கிய விடயமாக உள்ளது. குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் காலத்தில் நேட்டோ நாடுகளுடனான விரிசலடைந்துள்ள அமெரிக்க உறவினை சரி செய்வதும், ஆக்ரோசமான ரஸ்சியாவின் நடவடிக்கைகளைப் பிராந்திய ரீதியில் எதிர்கொள்வது, சீனாவின் சைபர் தாக்குதல் நெருக்கடி, காலநிலை மாற்றம், ஆப்கானிலிருந்த துருப்புக்களை விலக்கிக் கொள்ளுதல் என மூலோபாய ரீதியான சவால்களை எதிர்கொள்வது பற்றிய உரையாடல்கள் அமைந்திருந்தன.

ஜீன்–15 அமெரிக்காவுக்கும் ஐரோப்பிய யூனியனுக்குமிடையிலான வர்த்தக மற்றும் தொழில்நுட்பம் சம்பந்தமான மாநாடு ஒன்றைப் பிடன் ஏற்படுத்தியிருந்தார். 2014இற்கு பின்னரான முதற்சந்திப்பாக இது அமைந்தது. குறிப்பாக ட்ரம்ப் காலத்தில் பரிமாறப்பட்ட உற்பத்தி விடயங்களைக் கடந்து அதனுடைய தொழில்நுட்ப பரிமாற்றங்களையும் அவை தொடர்பான ஏற்றுமதி இறக்குமதி நடைமுறைகளை மீள அமைப்பதோடு வர்த்தக நடவடிக்கை சார்ந்த நீண்ட இடைவெளியை நிரப்புவதாகவும் அமெரிக்க ஐரோப்பிய யூனியன் மாநாடு திட்டமிடப்பட்டது. அது மட்டுமன்றி ஐரோப்பிய – சீன வர்த்தக உறவை முடிபுக்கு கொண்டுவரும் உபாயங்கள் உரையாடபடப்பட்டதுடன் ஜேர்மனியினதும் இத்தாலியினதும் நடவடிக்கைகள் அதிக நெருக்கடியை பிடனுக்கு ஏற்படுத்தியிருந்தது. அதாவது இத்தாலியும் ஜேர்மனியும் சீனாவுடனான வர்த்தக உறவை நிராகரிக்கு எத்தகைய நகர்வுக்கும் உடன்படமுடியாது எனத் தெரிவித்ததுடன் அதில் ஜப்பானும் இணைந்து கொண்டது குறிப்பிடக்கூடிய விடயமாக தெரிந்தது. ஆனாலும் பிடன் ஊடகங்களைச் சந்திக்கும்போதும் சீனாவுக்கு எதிரான கருத்துக்களையே முன்வைத்தார். அமெரிக்க ஜனாதிபதி ஜோபிடனின் ஐரோப்பிய விஜயத்தின் நிறைவு சுவிஸர்லாந்தின் தலைநகரமான ஜெனிவாவில் ரஸ்சிய ஜனாதிபதி விளாடிமீர் புடினோடு சந்தித்திப்போடு முடிவடைந்தது. ஜெனிவா மகாநாடு அதில் ரஸ்சிய ஜனாதிபதி புடினது உரையாடல்களின் வெளிப்பாடும் அமெரிக்காவிற்கும் அதன் ஜனாதிபதி ஜோ பிடனுக்கும் சவால்மிக்கது என்பதை உணர்த்துவதற்கான காணப்பட்டது. ஜெனிவா மகாநாட்டின் இரு தலைவர்களதும் சந்திப்பின் ஆரம்பத்திலிருந்தே நிறைவுபகுதி வரை நிகழ்ந்த அனைத்து விடயங்களையும் அவதானிக்கும்போது நெருக்கமில்லாத இரு நாட்டு தலைவர்களின்

சந்திப்பினை பிரதிபலிப்பதாக அவர்களது உடல்மொழி காட்சிப்படுத்தியது. அதுமட்டுமன்றி இருவரும் உரையாடுவதற்கு முன்னர் தமக்கிடையே கொண்டிருந்த கருத்துக்களை ஜெனிவா மகாநாட்டில் பிரதிபலித்திருந்தது. அதில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடனே அதிகம் சங்கடங்களை எதிர்கொண்டதாக அவதானிக்க முடிந்தது. அதாவது ஆட்சிக்கு வந்த பிற்பாடு அமெரிக்க ஜனாதிபதியாக ரஸ்சிய ஜனாதிபதி தொடர்பாக வெளியிட்ட கருத்துக்கள், ஜி–07 நேட்டோ என்பனவற்றில் ரஸ்சியாவிற்கும் ரஸ்சியா ஜனாதிபதிக்கும் எதிராக எழுப்பப்பட்ட விவாதங்களுக்கு பின்னால் அத்தலைவரை நேரடியாக சந்திக்கும்போது ஜொ பிடனின் சுயஅவமதிப்பின் பிரதிமை அவரது உரையாடலில் அவதானிக்க கூடியதாக இருந்தது.

ரஸ்சிய ஜனாதிபதியை கொலைகாரன் என்றும் ரஸ்சியாவின் நடவடிக்கைகளை ஆக்கிரமிப்புக்கள் என்றும் எச்சரிக்கைகளை ரஸ்சியாவிற்கு எதிராக வெளிப்படுத்திவிட்டுஅவ்வகை தலைவரைப் பேச்சுவார்த்தை மேசையில் நேருக்கு நேர் சந்திப்பது என்பது ஜோ பிடன் உள்ளார்ந்த ரீதியில் பலவீனமான தலைவர் என்பதை அடையாளப்படுத்தும் விடயமாகவே தெரிந்தது. அதேநேரம் விளாடிமிர் புடின் அமெரிக்காவை பொதுவெளியில் விமர்சிக்கும்போது முதிர்ச்சியோடும் சரியான அளவுகோலோடும் செயற்பட்டது மட்டுமன்றி ஜோ பிடன் மீதான அவதூறான எந்த வார்த்தைப் பிரயோகத்தையும் மேற்கொள்ளாது தவிர்த்து வந்தமை ஜெனிவா சந்திப்பில் புடின் பலத்தை முதன்மைப்படுத்தி இருக்கிறது. ஊடக சந்திப்பிலும் அதே மாதிரிரியான அணுகுமுறை ஒன்றை புடின் வெளிப்படுத்தி இருந்தார். ஊடகவியலாளர்களோடு உரையாடும்போது கேள்விக்கான பதில் மட்டுமன்றி தனது உடல்மொழியையும் அவர்களுக்கு ஏற்ற வகையில் மாற்றியிருந்தார்.


ஜோ பிடன் ஜி–07 மகாநாட்டுக்கு பின்பும் , நேட்டோ மாநாட்டுக்கு பின்பும், பிரித்தானிய மகாராணியின் சந்திப்பின் பின்பும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைமை என்பதை வெளிக்காட்டும் ஆளுமையாக காட்டிக்கொள்ளவில்லை. அவரோடு ஒப்பிடுகின்றபோது பிரித்தானிய பிரதமர் போரிஸ் ஜோன்சன் ஜி–07 மகாநாட்டை நடாத்திய நாடு என்பதை கடந்து அவரது ஆளுமை மேலோங்கி இருந்தது. தலைமை தாங்க வேண்டிய ஜோ பிடன் மகாநாடுகளிலும் சரி மகாநாடுகளுக்கு பின்பான ஊடக சந்திப்புக்களிலும் சரி ஒப்பீட்டடிப்படையில் பலவீனத்தையே பிரதிபலிப்பதாக அவதானிக்கமுடிகிறது. ஜோ பிடனோடு ஒப்பிடுகின்ற விதத்தில் போரிஸ் ஜோன்சன், ஜேர்மனிய சான்சிலர் அஞ்சலே மேர்கல் ஆகியோரது ஆளுமை மேலோங்கி இருந்தமையை அவதானிக்கமுடிந்தது. எனவே ஜோ பிடனது ஐரோப்பிய விஜயம் ஏகாதிபத்தியத்தின் கூட்டின் தலைமைத்துவத்தை அமெரிக்கா இழந்துவிட்டது என்ற செய்தியையும் தந்து நிற்கிறது. . இதனடிப்படையில் இரு தலைவர்களுக்குமிடையில் நடந்த உரையாடலின் தனித்துவமான விடயங்களை அவதானித்தல் அவசியமாகிறது. ரஸ்சிய தொடர்பில் அமெரிக்க மிக நீண்ட குற்றச்சாட்டாக சைபர் தாக்குதலை முன்வைத்து வந்தது. ஜெனிவா உரையாடலிலும் இத்தகைய விடயம் அமெரிக்க தரப்பினால் முன்வைக்கப்பட்டபோதும் விளாடிமீர் புடினுடைய பதில் அவ்வகை தாக்குதல்களை ரஸ்சியா மேற்கொண்டதெனில் அதற்குரிய ஆதாரங்களையும் முன்வையுங்கள் எனத்தெரிவித்துள்ளார். ஊடகவியலாளர்களும் இதே கேள்வியை கேட்கும்போது அத்தகைய பதிலே முதன்மைப்பட்டிருந்தார். எனவே அமெரிக்காவின் நீண்ட குற்றச்சாட்டுக்களில் ஒன்றான சைபர் தாக்குதலை இலகுவான உபாயங்களூடாக ரஸ்சிய ஜனாதிபதி எதிர்கொண்டுள்ளார். இதன்மூலம் அமெரிக்கா தான் வைத்திருந்த ரஸ்சிய மீதான வலிமையான குற்றச்சாட்டு ஒன்று ஆதாரங்களை தேடுவதற்காக கைவிட வேண்டிய நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளது. 21ஆம் நூற்றாண்டில் தகவல்யுகம் வளர்ந்த பிற்பாடு சைபர் தாக்குதலும் உயிரியல் போரும் வல்லரசுகளின் பிரதான ஆயுதமென ஹென்றி கீசிங்கர் குறிப்பிட்டுள்ளார். எனவே இத்தகைய உரையாடலை அமெரிக்கா வல்லரசு ரஸ்சிய வல்லரசு மீது குற்றச்சாட்டாக முன்வைப்பது அதன் பலவீனத்தையே காட்டுகிறது. ரஸ்சிய எதிர்க்கட்சி தலைவர் அலெக்சி நவால்னி தொடர்பிலான உரையாடலும் புடின்–பிடன் உரையாடலில் முதன்மைப்படுத்தப்பட்டது.


அதற்கான புடினின் பதில் ஜோ பிடனின் ஜனநாயகம் என்ற சொல்லாடலின் உச்சாடனத்தை அடியொற்றியதாக அமைந்திருந்தது. இது மேற்கு நாடுகள் அனைத்துக்கும் பொருத்தமான பதிலாகவே

உள்ளது. அதாவது நவால்னி ரஸ்சியாவின் சட்டங்களை மீறியுள்ளார். அவருக்கு ஆதரவாக 10சதவீத மக்கள் கூட இல்லையென தெரிவித்திருந்தார். எனவே அமெரிக்க முன்வைத்த மனித உரிமை மீறல் சார்ந்த குற்றச்சாட்டை புடின் இலாவகரமாக எதிர்கொண்டிருந்தார். உண்மையிலேயே முன்னாள் சோவியத் யூனியனை அமெரிக்கா வீழ்த்திய முறையையும் அதன் பின்னர் பொரிஸ் ஜெல்சன் என்ற தலைவரை ஆட்சியில் அமர்த்த அமெரிக்க எவ்வாறு ரஸ்சியாவை சிதைத்ததோ? அவ்வாறே நவால்னியை தயார்ப்படுத்துவதாக ரஸ்சியமக்களும் ரஸ்சிய ஆட்சியாளர்களும் கருதுகின்றனர். இரு தலைவர்களுக்குமிடையில் கைதிகள் பரிமாற்றம் பற்றிய உரையாடல் முதன்மைப்படுத்தப்பட்டிருந்த போதும் உடன்பாடு எட்டாதா உரையாடலாக அமைந்துள்ளது. குறிப்பாக நேரடியாவே ஜோ பிடன் அமெரிக்க கடற்படையின் முக்கிய பதவியில் உள்ள ஒருவரையும், அதேபோன்று ரஸ்சியாவின் இராணுவ சேவையில் உள்ள கைதிகளை பரிமாற்றுவது தொடர்பில் உரையாடல் முன்வைக்கப்பட்ட போது முடிவுகள் அறிவிக்கப்படாமலே அவ்விடயம் கையாளப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்குமிடையே ஆயுத உடன்படிக்கை பற்றி புதிய உடன்படிக்கைகளை உருவாக்குவது பற்றியும் உரையாடப்பட்டதோடு சிரியா, லிபியா, உக்ரைன், மற்றும் ஈரான் போன்ற நாடுகளின் கொதிநிலைக்கான நெருக்கடியை ரஸ்சியா ஏற்படுத்துவதாக ஜெனிவா உரையாடலில் உரையாடப்பட்ட போதும் ரஸ்சிய ஜனாதிபதி ரஸ்சியா தனது சுயபாதுகாப்புக்கான இராணுவ நடவடிக்கைகளை மாத்திரமே மேற்கொள்கின்றதென குறிப்பிட்டுள்ளார். இரு தலைவர்களும் நடாத்திய நீண்ட உரையாடலில் உடன்பாடு ஒன்று எட்டப்பட்ட விடயமாக இருநாட்டு இராஜதந்திரிகளையும் இராஜதந்திர பணிகளுக்காக இராஜதந்திர அலவலகங்களில் அனுமதிப்பதென பரஸ்பரம் உடன்பாட்டுக்கு வந்துள்ளது. அதுமட்டுமன்றி இரு தலைவர்களும் கோவிட் தொற்று, காலநிலை மாற்றம், வடகொரியா ஈரான் அணுவாயுத பரிசோதனை, ஆப்கானிஸ்தான் போர் என்பவற்றில் ஒன்றிணைந்து பணியாற்ற உடன்பட்டிருப்பதை பரஸ்பரம் அங்கீகரித்துள்ளனர். எனவே புடின்-பிடன் ஜெனிவா சந்திப்பு இரு எகாதிபத்திய தலைவர்களுக்கான தோற்கடிக்கப்படாத உரையாடலாக முடிந்தது. ஆனால் அமெரிக்க ஏகாதிபத்தியம் கடந்த காலத்தில் முன்மொழிந்தது போல் புடின் தலைமையிலான ரஸ்சிய ஏகாதிபத்தியத்தை இலகுவில் வெற்றிகொள்ள முடியாது என்பதை இவ் உரையாடல் உணர்த்தியுள்ளது. ரஸ்சியாவை சுற்றிவளைக்கும் நேட்டோவின் உத்திகளை தகர்க்கும் நேட்டோவின் நடைமறை இராஜதந்திர ரீதியிலும் அரசியல் மற்றும் இராணுவரீதியிலும் முனைப்பாக உள்ளது.

பிடனின் ஐரோப்பிய விஜயத்தின் போது சீனாவின் பட்டி மற்றும் பாதை முன்முயற்சிக்கு பதிலாக B3W (Build Back Better World) எனும் உலகளாவிய நிகழ்ச்சித்திட்டமொன்றை மேற்குநாட்ட தலைவர்கள் முன்மொழிந்துள்ளனர். அதனை சற்று விரிவாக நோக்குவோம். ஜோ பிடன் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் ஆட்சிக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் கிடப்பில் போடப்பட்ட **Blue Dot Network** என்பதை பற்றிய உரையாடல்களையும் முதன்மைப்படுத்தி உள்ளார். 2019ஆம் ஆண்டு டொனால்ட் ட்ரம்பினுடைய ஆட்சிக்காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட Blue Dot Network தாய்லாந்தின் தலைநகரான பாங்கொக்-இல் நடைபெற்ற இந்தோ பசுபிக் வர்த்தக மாநாட்டில் அமெரிக்க ஜப்பான் மற்றும் அவுஸ்ரேலியா ஆகிய நாடுகளின் கூட்டிணைவு திட்டமாக அறிவிக்கப்பட்டது. டொனால்ட் டரம்பின் தேசிய பாதுகாப்பு துணை ஆலோசகராகவும் சீனா தொடர்பான முக்கிய கொள்கை வகுப்பாளராகவும் விளங்கிய மத்யூ பாட்டிங்கர் என்பவர் புவிப்பகுதியில் இருக்கும் **Blue Net** ஐ மையப்படுத்தி உங்கள் உணவகங்களுக்கு நட்சத்திர மதிப்பீட்டை பெறுவது போலாகும் என இத்திட்டத்தை வர்ணித்தார். குறிப்பாக தனியார் துறையை மையப்படுத்திய உட்கட்டமைப்பு





முதலீடுகளை அதிகரிக்கும் வகையிலும் இத்திட்டமிடல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதில் குவாட் என்று அழைக்கப்படும் நாற்கரை பாதுகாப்பு உரையாடலில் இடம்பெற்றிருந்த இந்தியாவை உள்ளீர்ப்பதற்கான அமெரிக்க ஆர்வத்தையும் முதன்மைப்படுத்தியிருந்ததோடு புதுடில்லி பட்டி மற்றும் பாதை முன்முயற்சி அச்சுறுத்தலாக அமையுமென பங்கேற்க மறுத்தது.Blue Dot Network ஆனது ஜி–7, ஜி–20 போன்ற அமைப்புக்களுக்கு உட்கட்டமைப்பு மேம்பாடு போன்ற கொள்கைகளையும் அதன் தரங்களையும் அடித்தளமாக பயன்படுத்த திட்டமிட்டுள்ளதுடன், பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான உலகளாவிய மூலோபாயத்தையும் தொழில்நுட்ப செயற்பாட்டுக்கான உள்ளீடுகளையும் வழங்க முன்வந்துள்ளது. குறிப்பாக உள்ளீடுகளின் தர நிலைகளையும் நிதியாளர்களையும் பங்குதாரர்களையும் ஊக்குவிக்கும் நோக்குடன் இக்கட்டமையார் உட்கட்டமைப்பு முதலீட்டின் நீண்டகால வருவாயைத் தேடும் ட்ரில்லியன் கணக்கான டொலர்கள் பெறுமதிக்காக ஓய்வூதியம் மற்றும் காப்பீட்டு நிதிகள் உட்பட அமெரிக்காவிற்கு தனித்துவமான நிதிப்பலன்கள் உள்ளதென குறிப்பிட்டுள்ளனர். அதாவது ஏகாதிபத்தியத்தின் மையமே நிதிமூலதனம் அமெரிக்காவிடமே உண்டு என்பதை அவர்கள் வெளிப்படுத்தியிருந்தனர். இதனை மேலும் பலப்படுத்துவதற்கு உயர்தரமான சான்றுகளை வழங்கும் பொறிமுறையையும் சிபார்சு செய்தனர். Blue Dot Network; என்பது 12 ட்ரில்லியன் டொலர்கள் சொத்துக்களைக் கொண்டிருக்கும் உலகிலுள்ள 96 நாடுகளை உள்ளடக்கிய 150இற்கும் மேற்பட்ட முக்கிய தொழில் துறை நிர்வாகிகள் பாங்கெங் சந்திப்பில் பங்கேற்க வைத்ததாகவும் அமெரிக்க வெளியுறவுத்தறை தெரிவித்துள்ளது. இந்த ஆரம்ப கூட்ட அமர்வுகளில் உலகின் வலிமை படைத்த சிட்டி மற்றும் ஜே.பி. மோர்கன் உள்ளிட்ட நிதி நிறுவனங்களும் பொதுத்துறை அமைப்புக்களும் தாய்லாந்தின் அரச ஓய்வூதிய நிறுவனமும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடக்கூடிய விடயமாகும். இதில் பங்கெடுத்த மூத்த பாதுகாப்பு ஆய்வாளர் கிராஸ்மேன் என்பவர் அவுஸ்ரேலிய ஜப்பான் மற்றும் அமெரிக்க ஆகியவற்றின் டொலர்களுக்கு சீனாவின் பட்டி மற்றும் பாதை முன்முயற்சிக்கு (Belt and Road Initiatives) பொருந்தாது எனக் கூறினார். எனவே அமெரிக்க தலைமையிலான மேற்குலக நாடுகளின் அணுகுமுறைகள் சீனாவிற்கு எதிரானது. அதிலும் குறிப்பாக பட்டி மற்றும் பாதைகள் முன்முயற்சிக்கு எதிரான நகர்வுகளில் அதிகமாக உள்ளதென்பது தெளிவாகிறது. அதனை விளங்கிக்கொள்ளுதல் அவசியமான ஒன்றாகும்.

ஜோ பிடன் தலைமையிலான அமெரிக்க நிர்வாகம் தவிர்க்கமுடியாது டொனால்ட் ட்ரம்பின் கொள்கையைத் தொடர வேண்டிய நிலைக்கு அகப்பட்டுள்ளது. அதாவது சீன எதிர்ப்பு நிலை ஒன்றை முன்னெடுக்க வேண்டிய சூழல் கடந்த காலத்தை விட தற்போது அதிகரித்துள்ளது. ஜி7 மாநாட்டில் நிகழ்ந்த உரையாடல்கள் சீனாவின் உலகளாவிய நடவடிக்கைகளுக்கு பதிலீடான நடவடிக்கைகளே செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுத்தியிருந்தது. அவ்வாறே ஐரோப்பிய யூனியனுடனான உரையாடல் மற்றும் நேட்டோ நாடுகளுடனான சந்திப்புகளில் ஜோ பிடன் திட்டமிடலாகவும் அமுலாக்க செயன்முறையாகவும் கொண்டிருந்ததை அவதானிக்க முடிகிறது. எனவே அமெரிக்காவின் மிக முக்கிய இலக்காக சீனாவின் பட்டி மற்றும் பாதை முன்முயற்சி மாறியுள்ளது. சீனா என்ற ஒரு நாட்டின் திட்டத்தை ஏகாதிபத்தியங்களின் கூட்டிணைவான ஜி–7 நாடுகள் இணைந்து எதிர்க்க வேண்டிய நிரிப்பந்தம் ஏற்பட்டடள்ளது. தனித்த அமெரிக்காவோ அல்லது பிரித்தானியாவோ சீனாவின் உபாயத்தை எதிர்கொள்ள முடியாத உலக சூழல் ஒன்று ஏற்பட்டுள்ளது. Blue Dot Network ஆனது உலகளாவிய உட்கட்டுமான முயற்சியை இலக்குவைத்ததாகவே தெரிகிறது. இதேகொள்கையைச்

சீனா 2012ஆம் ஆண்டுக்கு பின்னர் உலகளாவிய ரீதியில் மேற்கொண்டுவருகிறது. 2016இல் இதற்காக ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (AIIB) ஒன்றை ஆரம்பித்து அதற்கான அமுலாக்கங்களை மேற்கொண்டுவருகிறது. எனவே Blue Dot Network இன் பிரதான இலக்கை சீனா முன்கூட்டியே தென்பூகோள நாடுகளை உட்கட்டமைப்பு எனும் பொறிமுறையூடாக இணைத்த வந்துள்ளது. இதனை உடைக்கும் விதத்திலேயே தாய்லாந்து சந்திப்பானது அதற்கானதொரு ஆரம்ப முயற்சியாகவே காணப்பட்டது.

ஆனால் சீனாவின் புதிய பட்டுப்பாதையை தகர்ப்பது என்பது மட்டுமன்றி தென்பூகோள நாடுகளது உட்கட்டமைப்பு வளர்ச்சிகளையும் அதில் சீனாவின் பங்குகளையும் இல்லாமல் செய்வதே Blue Dot Network இன் பிரதான இலக்காகத் தெரிகிறது. சீனாவின் பொருளாதார வளர்ச்சியை தென்பூகோள நாடுகளை மையப்படுத்தி திட்டமிட்டிருக்கின்ற பொறி முறையை தகர்ப்பதும் இதன் இன்னொரு நோக்கமாகும். குறிப்பாக இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளது பொருளாதார வளர்ச்சி தென்பூகோள நாடுகளிலேயே தங்கியிருந்தது. தென்பூகோள நாடுகளின் வளங்களையும் சந்தைகளையும் ஆக்கிரமித்த அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் பாரியளவான சுரண்டல்களை மேற்கொண்டு தமது நாட்டின் பொருளாதாரத்தினைச் செழிப்பு நிலைக்கு கொண்டு சென்றன. காலனித்துவத்திற்கு முற்பட்ட காலத்தில் ஐரோப்பிய பேரரசுகள் சுரண்டியது போல் காலனித்துவத்திற்கு பின்னர் அமெரிக்க ஐரோப்பிய ஏகாதிபத்தியங்கள் அத்தகைய சுரண்டலை ஜனநாயம் மனித உரிமை சுதந்திரம் என்ற எண்ணக்கருவோடு மேற்கொண்டன. அத்தகைய சுரண்டலுக்கான ஐரோப்பிய அமெரிக்க வாய்ப்புக்களை சீனா கைப்பற்றியுள்ளது ஆனால் சீனா அதனை win - win உபாயத்தினூடாக கையகப்படுத்தியிருப்பதுடன் சீனாவிற்குள் மூலதனத் திரட்சியை வலுவாக்குகின்றது. இதுவே மேற்கு நாடுகளின் பிரதான முரண்பாடாகும். இங்கு இருதரப்புமே சுரண்டல் என்ற உபாயத்தை புதிய தளங்களில் பிரவேசித்து வருகின்றனர். மேற்கினது சுரண்டல் முடிவுக்கு வர சீனாவின் சுரண்டல் ஆரம்பிக்கின்றது. மேற்கின் அணிதிரள்வு என்பது சீனாவின் சுரண்டலைத் தடுத்து தொடர்ந்தும் தமது ஆதிக்கத்தையும் சுரண்டலையும் நிலைநாட்டுவதாகும். உலகத்தை ஆள்வதற்கான போட்டித்தன்மை சீனா எதிர் மேற்கு என்ற நிலை உருவாகி இருப்பதோடு மேற்கினால் ஒன்றுக்கு மேற்பட்ட உபாயம் வகுக்கப்பட்டபோதும் சீனாவின் பட்டுப் பாதை முன்முயற்சியை இதுவரை தோற்கடிக்க முடியவில்லை ஜி–7, நேட்டோ, ஐரோப்பிய யூனியன், இந்தோ–பசுபிக் உபயாம், குவாட் நாடுகள் என்ற வரிசையில் Blue Dot Network கும் ஒன்றாக விளங்குகின்றது. இதன் முயற்சிகளும் முன்கூட்டியதை போன்றே பலவீனமாக அமையும் என்ற எதிர்பார்ப்பு அதிகமாக உள்ளது. காரணம் சீனா முன்னெடுக்கும் அதேமாதிரியான உபாயங்கள் சீனா அதில் பயணம் செய்த பல ஆண்டுகளுக்கு பின்னர் மேற்கு அத்தகைய முயற்சிகளை தொடங்குவது என்பது அதன் ஆரம்ப பலவீனத்தையே காட்டுகிறது. அதுமட்டுமன்றி மேற்கு நாடுகள் போன்று மேலாதிக்க தளத்திலிருந்து சீனா உலகத்தை அணுகவில்லை. மாறாக சமவலுவுடனயே உலக நாடுகளை அணுக முயலுகிறது. உலகிலுள்ள அனைத்து நாடுகளையும் அரசுகளையும் சீனா சம அரசுகளாகக் கருதுவதாக கூறுகிறது. இதனை ஜி–7 மாநாட்டு நிறைவுக்கு பின்னர் பிரித்தானிய சீன தூதரகத்தின் செய்தி தொடர்பாளர் தெரிவித்த கருத்து கவனிக்கத்தக்கது. அதாவது ஜி–7 போன்ற சிறு குழுக்களால் உலகை ஆளமுடியாது. அத்தகைய யுகம் முடிவுக்கு வந்துவிட்டது.

சீனா உலகத்தின் எல்லா அரசுகளையும் சமமாக கருதிக்கொண்டு அனைத்து நாடுகளுடன் பங்கேற்புடன் கூடிய தீர்மானங்களையே முன்னெடுக்க விரும்புகிறது. அதுமட்டுமன்றி ஜி–7 போன்ற குழுக்கள் சீனா கடைப்பிடிக்கும் அதே கொள்கைகளைக் காலந்தாழ்த்தி பின்பற்ற முயலுகிறது. சர்வதேச விவகாரங்களில் ஐக்கிய நாடு சபை போன்ற பங்கேற்பு தீர்மானங்களையே சீனா அங்கீகரிக்கும் எனக் குறிப்பிட்டார். இவ்வாறு முன்மொழிவுகளை மட்டுமே மேற்கு ஏகாதிபத்தியம் மேற்கொள்ள கிழக்கு ஏகாதிபத்தியமான சீனாவும் ரஸ்சியாவும் உலகத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதில் முன்னேறி செல்கிறது. ஜோ பிடன் ஐரோப்பிய விஜயத்தை முடித்துக்கொண்டு அமெரிக்க திரும்பியதும் தனது ருவிட்டரில் அமெரிக்க மீண்டும் உலக சவாலை எதிர்கொள்ள களத்துக்கு பிரவேசித்துள்ளது எனும் சாரத்தை வெளிப்படுத்தியுள்ளார். எனவே மேற்கு எதிர் கிழக்கு ஏகாதிபத்தியங்களுக்கிடையிலான மோதல் வர்த்தகத்திலும் நிதி மற்றும் தொழில்துறையிலும் ஆரம்பித்துவிட்டது.